


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 342 | 4 Pages | 8.7.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 342 | 4 பக்கங்கள் | 8.7.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்**

**பெருமை யுடைத்திவ் வுலகு**

**விளக்கம்:**

**நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமைஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.**

## மும்பை பயங்கரவாத தாக்குதல்: ராணா வெளியிட்ட திடுக்கிடும் தகவல்கள்



மும்பை, ஜூலை 8

நாட்டின் நிதி தலைநகரான மும்பையில் கடந்த 2008 ல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில், 170 பேர் கொல்லப்பட்டனர். மும்பை பயங்கரவாத தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட தஹவுர் உசேன் ராணாவை அண்மையில் அமெரிக்கா இந்தியாவிடம் ஒப்படைத்தது. இதையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் இந்தியா கொண்டு வரப்பட்டார் அவரிடம் தேசிய புலனாய்பு படையினர் கடந்த 18 நாட்களாக விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையில் அவர் பாகிஸ்தானில் எம்பிபிஎஸ் பயின்றதாகவும், அங்குள்ள ராணுவ மருத்துவமனையில் டாக்டராக பணியாற்றியதாகவும், இந்த நேரத்தில் பாகிஸ்தானின் ஐ.எஸ். அமைப்புக்கு உதவிட இந்தியா சென்றதாகவும் கூறியுள்ளார். மேலும், பாகிஸ்தான் ராணுவத்திற்காக உளவு பார்த்ததாகவும், வளைகுடாப் போரில்தனக்கும்பங்குஇருந்ததாகவும்அவர்கூறியுள்ளார்.மும்பையில் 2008ல்தாக்குதல்நடத்தலுக்கு முன்னர் 2 நாட்கள்தங்கி இருந்ததாகவும், பயங்கரவதி ஹெட்லியுடன் தொடர்பில் இருந்தேன் என்றும், டெல்லி, புனே, கோவா, என பல நகரங்களை சுற்றி வந்து நோட்டமிட்டதாகவும் திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

## பஹல்காம் தாக்குதல்; கைது செய்யப்பட்ட இருவருக்கு மேலும் 10 நாட்கள் என்.ஐ.ஏ. காவல்




ஸ்ரீநகர், ஜூலை 8

ஜம்மு காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலா தளத்தில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர்இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான 'தி ரெசிஸ்டண்ட் பிரண்ட்' பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது. இந்த தாக்குதல் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) விசாரணைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது.

இதன்படி பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக என்.ஐ.ஏ. வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறது. தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், தாக்குதல் நடைபெற்றபோது சம்பவ இடத்தில் இருந்தவர்கள், தாக்குதலில் இருந்து உயிர் தப்பியவர்களிடம் என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இதற்கிடையில், பஹல்காம் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியதாக 2 பேரை கடந்த ஜூன் 22 ந்தேதி என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். இதன்படி பஹல்காமின் பட்கோலே பகுதியை சேர்ந்த பர்வேஸ் அகமது மற்றும் பஹல்காமின் ஹில்பார்க் பகுதியை சேர்ந்த பஷீர் அகமது ஜோதார் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் லஷ்கர்இதொய்பா அமைப்பை சேர்ந்தவர்கள் என்பதை கைது செய்யப்பட்டவர்கள் உறுதி செய்ததாகவும், கைது செய்யப்பட்ட இருவரும் பஹல்காம் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளுக்கு உணவு, இருப்பிடம், போக்குவரத்து உள்ளிட்ட வசதிகளை செய்து கொடுத்துள்ளனர் என்றும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட பர்வேஸ் மற்றும் பஷீர் ஆகியோர் ஜூன் 23 ந்தேதி உள்ளூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை 5 நாட்கள் என்.ஐ.ஏ. காவலில் எடுத்து விசாரிக்க கோர்ட்டு அனுமதி அளித்தது. பின்னர் இந்த வழக்கு என்.ஐ.ஏ. சிறப்பு கோர்ட்டுக்கு மாற்றப்பட்ட நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் 10 நாட்களில் என்.ஐ.ஏ. காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இந்த 10 நாள் காவல் இன்றோடு முடிவுக்கு வந்த நிலையில், பர்வேஸ் மற்றும் பஷீர் ஆகியோர் இன்று மீண்டும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை மேலும் 10 நாட்கள் என்.ஐ.ஏ. காவலில் வைக்க கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## பத்மநாபசுவாமி கோவிலுக்குள் ஸ்மார்ட் கிளாஸ் அணிந்து வந்த நபர் கைது

திருவனந்தபுரம், ஜூலை 8

குஜராத் மாநிலத்தை சேர்ந்த 66 வயதான சுரேந்திர ஷா என்பவர், கேரளமாநிலத்தில்உள்ளபிரசித்திபெற்றபத்மநாபசுவாமிகோவிலுக்கு வந்துள்ளார். அப்போது அவர் கேமராவுடன் கூடிய 'ஸ்மார்ட் கிளாஸ்' எனப்படும் கண்ணாடியை அணிந்து கோவிலுக்குள் நுழைந்ததாக கூறப்படுகிறது.

வரை பார்த்து சந்தேகமடைந்த கோவில் ஊழியர்கள், அவரை அழைத்து சோதனை செய்தனர். அப்போது அவர் அணிந்திருந்த கண்ணாடியில் கேமரா பொறுத்தப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. பத்மநாபசுவாமிகோவிலுக்குள்கேமராபொருத்தப்பட்டகண்ணாடிகள் போன்ற மின்னணு சாதனங்களை கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கோவில் ஊழியர்கள் இது குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து கோவிலுக்கு விரைந்து வந்த போலீசார், சுரேந்திர ஷா மீது வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், உள்நோக்கத்துடன் அவர் இவ்வாறு செய்யவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.


# மதுரை மாநகராட்சியில் அனைத்து மண்டல தலைவர்களும் ராஜினாமா செய்ய முதல்அமைச்சர் உத்தரவு

மதுரை, ஜூலை 8

மதுரை மாநகராட்சி மண்டல தலைவர்கள் பதவி விலகும்படி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாகதகவல்வெளியாகியுள்ளது. மதுரை மாநகராட்சி மேயரின் கணவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதை தொடர்ந்து அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், அமைச்சர் மூர்த்தி இடையே நிலவும் கோஷ்டி பூசலால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக, தேவைப்பட்டால் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுப்பேன் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநில தலைவர் அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநில தலைவர் அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பகுஜன் சமாஜ் கட்சியின் திருப்பூர் மாவட்ட செயலாளர் அலாவுதீன் தலைமையில் நடைபெற்றது

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் அண்ணா சிலை பகுதியில் பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநில தலைவர் அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது அவரது திருவுருப் படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது மற்றும் பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது

மேலும் இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தமிழ் புலிகள் கட்சி மற்றும் தோழமைக் கட்சிகள் மற்றும் கட்டிட தொழிலாளர்கள் சங்கம் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் வழக்கறிஞர் ரங்கநாதன் வளவன் வினோத் திருமா ரகு மற்றும் தமிழ் புலிகள் கட்சி சார்பாக நகர செயலாளர் தண்டபாணி கலந்து கொண்டார் மேலும் கட்டிட தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் வேல் முருகன் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களுக்கு மலர்தூதி மரியாதை

## நாளை நாடு தழுவிய அளவில் வேலை நிறுத்தம் அறிவிப்பு



சென்னை, ஜூலை 8

நாடு தழுவிய அளவில் வரும் 9ம் தேதி வேலை நிறுத்தம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைநிறுத்தத்தில் தமிழகத்தில் உள்ள தொ.மு.ச, சி.ஐ.டி.யு, ஏ.ஐ.டி.யு.சி உள்ளிட்ட 13 முக்கிய தொழிற்சங்கங்கள் பங்கேற்க உள்ளதாக அறிவித்துள்ளன. விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, தொழிலாளர் விரோத சட்டங்கள் உள்ளிட்ட 17 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய அளவிலான வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் மக்கள் விரோத மற்றும் தொழிலாளர் விரோத போக்கைக் கண்டித்து வேலைநிறுத்தம் நடத்தப்படுவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், அரசுப் பேருந்து மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள், மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் கலந்து கொள்வார்கள் எனக் கூறப்படுகிறது.

தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள 17 அம்சக் கோரிக்கைகளில், ஊதிய உயர்வு, பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவதைக் கைவிடுதல், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டங்கள் தொடரும் என தொழிற்சங்கத் தலைவர்கள் கூறியுள்ளனர்.

## சோமாட்டோ, ஸ்விகிக்கு பதிலாக புதிய செயலியை அறிமுகப்படுத்திய ஹோட்டல் உரிமையாளர்கள்

சோமோட்டோ, ஸ்விகி போன்ற செயலிகளுக்கு பதிலாக ஜாரோஸ் என்ற பெயரில் புதிய செயலி தொடங்கப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் சோமோட்டோ, ஸ்விகி போன்ற உணவு டெலிவரி நிறுவனங்களுக்கு பதிலாக ஹோட்டல் உரிமையாளர்களே சேர்ந்து புதிய உணவு டெலிவரி செயலியை அறிமுகம் செய்துள்ளனர்.

நாமக்கலில் ஹோட்டல்கள், பிரியாணி கடைகள் என நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் உள்ள நிலையில் உணவு டெலிவரி செய்யும் நிறுவனங்களிடையே கமிஷன் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. விளம்பர கட்டணம், மறைமுக கட்டணம் போன்றவற்றால் வரும் லாபத்தில் 50% பாதிப்பு ஏற்படுவதாக நாமக்கல் மாவட்ட ஹோட்டல் உரிமையாளர்கள் குரல் எழுப்பி வந்தனர். பிரச்சினைகளை தீர்க்கக்கோரி சம்பந்தப்பட்ட சோமோட்டோ, ஸ்விகி நிறுவனங்களிடம் கோரிக்கை வைத்திருந்தனர். ஆனால் ஹோட்டல் உரிமையாளர்கள் கோரிக்கைகளை நிறுவனம் பரிந்துரை செய்யவில்லை. இந்நிலையில் ஜூலை 1ம் தேதி முதல் சோமோட்டோ, ஸ்விகி டெலிவரி நிறுவனங்களுக்கு உணவு வழங்காமல் நிறுத்தி வைத்திருந்தனர்.

இந்நிலையில் சோமோட்டோ, ஸ்விகி போன்ற செயலிகளுக்கு பதிலாக ZAAROZ (ஜாரோஸ்) என்ற பெயரில் புதிய செயலி தொடங்கப்பட்டுள்ளது. நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலில் வைத்து ஐம்பதுக்கு மேற்பட்ட ஹோட்டல் உரிமையாளர்கள் புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

## கடையம் நித்திய கல்யாணி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்



தென்காசி ஜூலை 8

தென்காசி மாவட்டம் கடையம் ராமநதி அணைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது நித்திய கல்யாணி அம்மன் சமேத வில்வவன நாதர் கோவில். சுமார் 800 ஆண்டுகளுக்கும் மேல் பழைமை வாய்ந்த இந்தக் கோவிலை விக்கிரம பாண்டியன் அமைத்ததாகவும், தொடர்ந்து நாயக்கர்கள் உள்ளிட்டோர் பராமரித்து வணங்கி வந்ததாகவும் வரலாறு.

இந்தக் கோவிலில் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதையடுத்து இந்த ஆண்டு கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்து கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததையடுத்து இன்று கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது.

கடந்த 2ம் தேதி முதல் கணபதி பூஜையுடன் கும்பாபிஷேக பூஜைகள் தொடங்கின. ஐந்து கால யாகசாலை பூஜைகள் நிறைவடைந்ததையடுத்து இன்று காலை ஆறாம் கால யாகபூஜையைத்தொடர்ந்துகாலை 9.30மணிக்கு விமானம் மற்றும் ராஜ கோபுரங்களுக்கு ஒரே நேரத்தில் புனித நீரூற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து வில்வ வனநாதர் மற்றும் நித்ய கல்யாணி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம், தீபாராதனை நடைபெற்று பிரசாதம் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் கடையம், கீழக்கடையம், முதலியார்பட்டி, புலவனூர், சேர்வைகாரன்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து ஏராளமானபக்தர்கள்கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு: 9443699066

WHATSAPP CHENEL

DHINAKANI.COM

# வத்திராயிருப்பு அருகே நல்லதங்காள் கோயில் சிலை உடைக்கப்பட்ட நிலையில் அறநிலையத்துறை சார்பில் பாலாலயம் நடத்த கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூலை 8

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே அர்ச்சுனாபுரத்தில் அமைந்துள்ளது நல்லதங்காள் கோயில். தமிழக பெண்களின் கலாச்சாரத்திற்கும், அண்ணன் தங்கை உறவிற்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய நல்லதங்காள், அவர் வாழ்ந்த 15ம் நூற்றாண்டில் நாட்டில் நிலவிய கடும் பஞ்சம் காரணமாக பசியால் துடித்த தனது ஏழு பிள்ளைகளையும் கிணற்றில் வீசி கொன்றுவிட்டு தானும் அந்த கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.



அவர் தற்கொலை செய்து கொண்ட கிணறு அவர் தங்கிய இடம் ஆகியவை நினைவுச் சின்னமாகவும் கோயிலாகவும் எழுப்பப்பட்டு மக்களால் வழிபடப்பட்டு வருகிறது. அக்கோயிலில் நல்லதங்காள் பத்திரகாளியம்மன் வடிவில் எழுந்தருளி அருள் பாலித்து வருகிறார். தமிழகம் முழுவதிலும் இருந்தும் குழந்தை வரம் வேண்டி ஏராளமானோர் இங்கு வந்து நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டு வருகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இக்கோயிலில் கடந்த ஜனவரி 26 ஆம் தேதி கோயில் கதவுகள் உடைக்கப்பட்டு நல்லதங்காள் சிலை உடைக்கப்பட்டதை கண்டு பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர் .இந்த சம்பவத்தில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் சிலை உடைக்கப்பட்ட நல்லதங்காள் கோயிலில் அர்ச்சுனாபுரம் கிராம மக்கள் சார்பாக ஏற்கனவே பாலாலயம் நடத்தப்பட்ட நிலையில் தற்போது இந்து சமய அறநிலைத்துறை சார்பாக இன்று பாலாலயம் நடத்த எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்கள் நூற்றுக்கணக்கானோர் கோயில் முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பவ இடத்தில் மாவட்ட காவல் கணை கண்காணிப்பாளர் ராஜா, காவல் ஆய்வாளர் மாரியப்பன், வட்டாட்சியர் ஆண்டாள் உள்ளிட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அந்த பகுதியில் 30 க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளதால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது.

# மணலி அண்ணா சிலை அருகே திமுக தெருமுனை கூட்டம்

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி சார்பில் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி அமைப்பாளரும் 20வது வட்டக் கழக முன்னாள் செயலாளருமான மணலி எஸ்.ஸ்டாலின் ஏற்பாட்டில் மறைந்த தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதியின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம், நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளரும் 2வது மண்டலக் குழுத் தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் தலைமையில் மணலி அண்ணா சிலை அருகில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம்,



மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும் கழக மீனவர ணி துணைத்தலைவருமான கே.பி. சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பின்னர் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். முன்னதாக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வேல்கணேசன், திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், லோகேஸ்பிரபு, மோகன், விக்னேஷ் ஆகியோர் அனைவரையும் வரவேற்புரையாற்றனர். மாவட்ட இளைஞரணி செயலாளர் ஆர்.டி. மதன்குமார், வட்டச் செயலாளர்கள் முத்துசாமி, கரிகாலசோழன், சாலை கணேசன், செல்வம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சிஎஸ்எஸ்டி.

சீனிவாசன், இனியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் தலைமை கழக பேச்சசாளர்கள் திருப்பத்தூர் ரஜினி, வாசு கருணாநிதி, இளம் பேச்சாளர் அ.தா. டெக்சின் ரொமேரியோ, ஆகியோர் கலந்துகொ ண்டு சிறப்புரையாற்றினர். இதில் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் அருள்தாசன், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், திருவொற்றியூர் மத்திய பகுதி துணைச் செயலாளர்கள் தினகரன், ரமேஷ்குமார், துர்கா கோதண்டம், நாகலிங்கம், மனோகரன், ரவி, ஜெயா, சுமித்ரா, இளைஞரணி நிர்வாகிகள் யுவராஜ், வினோத், அஜய் தென்னவன், டேவிட், எம்.எஸ். மணிகண்டன், ரூபேஷ், புகழரசு, மகேஷ், பாஸ்கர் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் சதீஷ்குமார், மணிகண்டன், கு.சுரேஷ் ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தெக்குப்பட்டு கே.கே. நகர் பொதுமக்கள் 50மேற்பட்ட வாழ்ந்த இடத்தில் போலி பத்திரம் மூலம் சொந்தம் கொண்டாடும் பேபி அம்மா குடும்பத்தினர்

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி தாலுக்கா தெக்குப்பட்டு ஊராட்சி கே.கே. நகர் பகுதியைச் சேர்ந்த 50க்கு மேற்பட்ட பொதுமக்கள் இன்று காலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நூதன முறையில் மனு அளித்தனர். மனுவில் கே.கே நகர் பகுதியில் சுமார் 60 வருடங்களுக்கு மேல் அரசு புறம்போக்கு நிலத்தில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடு கட்டி வருகின்றனர். எங்களுக்கு அரசு சார்பில் சாலை வசதி குடிநீர் வசதி உள்ளது தங்கள் பகுதியில் ஒரு சில வீடுகளுக்கு மட்டும் மின் இணைப்பு பெற்று வாழ்ந்து வருகின்றோம்கடந்த வருடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்து நாட்றம்பள்ளி வட்டாட்சியர்ராமகிருஷ்ணன் ஆய்வு மேற்






கொண்டு இதுவரை எந்த நடவடிக்கை மேற்கொள்ளாமல் பணியிட மாறுதல் பெற்று சென்று விட்ட நிலையில் இது போன்று பலமுறை அதிகாரிகள் அலை கழிப்பதால் மன வேதனை அடைந்த அப்பகுதி கிராம மக்கள் குடும்ப அட்டை, ஆதார் அட்டையை ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் தெக்குப்பட்டு வருவாய் கிராம சர்வே எண் 81/6, 81/7 என். சம்பந்தமாக 60/2017 ஆண்டு நாங்கள் அசல் வழக்கு குறித்து எதிர் தரப்பு டி.கே. பேபியம்மாள் என்பவருக்கு ஆதரவாக வருவாய்த்துறையினர் செயல்பட்டு வருகின்றனர். இதனால் டி.கே. பேபியம்மாள் வாரிசுதாரர்கள் அப்பகுதியில் குடியிருக்கும் பொது மக்களை மிரட்டி வீடுகளை காலி செய்யுமாறு துன்புறுத்துவதாகவும் மிரட்டல் விடுத்து வருகின்றனர். மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணில் உள்ள போலி பத்திரம் மூலம் உரிமை கொண்டாடும் பேபியம்மாள் இடமிருந்து அரசு நிலத்தை மீட்டு தங்கள் குடியிருக்கும் மக்களுக்கு வீட்டுமனை பட்டா மற்றும் மின் இணைப்பு குடிநீர் ரசீது பெற்று தர நடவடிக்கைஎடுக்கவேண்டும் என மாவட்ட ஆட்சியரை கேட்டுக் கொண்டனர்.

# வீட்டின் மீது சாய்ந்து கீழே விழுந்து உடையும் நிலை: மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி கிராம மக்கள் கோரிக்கை

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம் சின்ன ஆனையூர் கிராமத்தில் ரத்தினசாமிதந்தைபெயர் தங்கவேலு என்பவரது வீட்டின் அருகில் உள்ள மின் கம்பம் முழுமையாக பழுதடைந்து வீட்டின் மீது சாய்ந்து கீழே விழுந்து உடையும் தருவாயில் உள்ளது.

இது சம்பந்தமாக ஏற்கனவே இவரது மனைவி முருகவள்ளி பெயரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மக்கள்குறைதீர்க்கும் நாளில் 30.11.2024 புகார் கொடுத்தும் இதுவரையிலும் எந்த நடவடிக்கை



யும் எடுக்கவில்லை. தற்போது 07.07.2025 இன்று கமுதி மின் பொறியாளர் அலுவலகத்தில் உதவி மின் பொறியாளர் அலுவலகரிடம் கிராம மக்களுடன் நேரடியாக சென்று மனு கொடுத்தனர். அதிகாரிகள் விரைவில் சரி செய்து தருவதாக நம்பிக்கை அளித்துள்ளனர்.

மனுவில் மின்கம்பம் உடைந்து விழுந்து வீட்டின் மீது பக்கவாட்டில் சாய்ந்தவாறு உள்ளது. இந்த வீட்டில் வசிக்கும் குடும்பத்தினருக்கும், கிராம பொதுமக்களுக்கும் பாதுகாப்பாற்ற ஆபத்தான நிலையில் உள்ளது என்பதை புகைப்படத்துடன் கூடிய மனுவாக கொடுக்கப்பட்டுள்ளது. இதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.. மனுவில் மின்கம்பம் உடைந்து விழுந்து வீட்டில் வசிக்கும் குடும்பத்தினருக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பாற்ற மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது என்பதை புகைப்படத்துடன் கூடிய மனுவாக கொடுக்கப்பட்டுள்ளது. இதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேனி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெற உள்ள முகாம்

தேனி, ஜூலை 8

தமிழக முதல்வரின் உத்தரவின்படி, நகர்புற மற்றும் கிராமப்பகுதி மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் தேனி மாவட்டத்தில் தொடங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தேனி மாவட்டத்தில் உள்ள நகராட்சி பகுதிகளில் 28 முகாம்கள், பேரூராட்சி பகுதிகளில் 21 முகாம்கள், வட்டார ஊராட்சிகளில் 25 முகாம்கள் என 74 முகாம்கள் ஜீலை 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

எரிசக்தி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி, காவல், மாற்றுத்திறனாளிகள் நலம், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், கூட்டுறவு ஆகிய அரசுத்துறைகள் மூலம் நகர் பகுதிகளில் 13 துறைகளில் 43 சேவைகள், கிராமப் புறங்களில் 15 துறையில் 46 சேவைகள் வழங்கப்பட உள்ளது.

மகளிர் உரிமைத்தொகை பெற இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைப் பெற தகுதியுள்ள விடுபட்ட மகளிர் யாரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்கு சென்று தங்கள் விண்ணப்பத்தை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கான விண்ணப்பம் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இந்த திட்டம் குறித்த விவரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக, "தன்னார்வலர்கள் மூலம் வீடுவீடாக சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி நாளை (08.07.2025) முதல் தொடங்க உள்ளது.

அதனை தொடர்ந்து 15.07.2025 முதல் முகாம்கள் நடைபெறவுள்ளது. இந்த முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

# தஞ்சை மாவட்ட இடைநிலை ஆசிரியர் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

தஞ்சாவூர், ஜூலை 8

தஞ்சை பெசன்ட் அரங்கில் தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட பொதுக்குழு கூட்டமும் புதிய நிர்வாகிகள் தேர்வு மற்றும் பதவி ஏற்பு விழாவும் நடந்தது.

விழாவிற்கு மாவட்ட பொறுப்பாளர் சிவசங்கர் தலைமை தாங்கினார். கூட்டத்தில் தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளரும், எஸ் டி எஃப் ஐ அகில இந்திய செயலாளருமாகிய சங்கர கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

மேலும் மாநில அமைப்பு செயலாளர் வெங்கட்ராமன் மாநில இனைச் செயலாளர்



ராஜரத்தினம் புதுக்கோட்டை மாவட்ட தலைவர் அன்பழகன் புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் விஜயகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கூட்டத்தில் தோழமை சங்கங்களான தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாநில துணைத்தலைவர் இதயராஜா தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளர் மணிமாறன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்

பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி கீழ்கண்ட பொறுப்பாளர்கள் தஞ்சாவூர் மாவட்ட தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கத்தின் புதிய பொறுப்பாளராக பதவி ஏற்று கொண்டனர்.

எஸ்.வீரமணி மாவட்ட தலைவராகவும், ஏ. சிவசங்கர் மாவட்ட செயலாளராகவும், கே சிவபாஸ்கர் பொருளாளர் ஆகவும் பிரபு தலைமை நிலையச் செயலாளராகவும் மகளிர் அணி தலைவியாக செல்வராணி, அமைப்புச் செயலாளராக மாதவன், துணைத் தலைவர்களாக தங்கம், வானதி இணைச் செயலாளராக திலகமணி, துரைசிங்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பாளராக பதவி ஏற்று கொண்டனர். கூட்டத்தின் முடிவில் புதிய பொறுப்பாளர்கள் அறிமுகமும் பின்னர் அவர்களின் ஏற்புரையும் நடைபெற்றது.

# நான்காண்டு அரசு சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சி கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் திறந்து வைத்தார்

கோவை, ஜூலை 8

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டியிருந்த நான்காண்டு அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து, நான்காண்டு சாதனை மலர் புத்தகத்தை கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி.ப.ராஜ்குமார் வெளியிட்டார்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பவன் குமார் க.கிரியப்பனவர் மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர காவல் ஆணையாளர் அ.சரவணசுந்தர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.கார்த்திகேயன் மாநகராட்சி ஆணையாளர்மா.சிவகுருபிரபாகரன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.செந்தில் அண்ணா, பணிக்குழுத் தலைவர் சாந்திமுருகன், மாமன்ற உறுப்பினர்கள் சுமா, கார்த்திக் செல்வராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி சாதனை படைத்துள்ளார்கள். அந்த வகையில், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயண திட்டம், கொரோனா நிவாரண நிதியாக ரூ.4000, மக்களை தேடி மருத்துவம்,

இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 , புதுமைப் பெண்கள் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், வரலாற்று சிறப்பு மிக்க காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு உள்ளிட்ட சிறப்பு வாய்ந்த திட்டங்களை தந்துள்ளார்கள்.

தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி என்ற தலைப்பில், தமிழ்நாடு முதலமைச்சர் நான்கு ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட அரசு திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்புகைப்படக்கண்காட்சி, இன்று முதல் 3 நாட்களுக்கு தினசரி காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறும். இப்புகைப்படக் கண்காட்சியில், முதலமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், அரசின் சிறப்பு திட்டங்களான, கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை திட்டம், மக்களுடன் முதல்வர், மக்களைதேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்து, இல்லம்தேடிகல்வி, நான் முதல்வன், கல்லூரி கனவு,

விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண், தமிழ்புதல்வன், உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசுநலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் தொடர்பான பல்வேறு புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

# நாமக்கல் மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம்

நாமக்கல், ஜூலை 8

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 599 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்றுகொண்ட மாவட்ட கலெக்டர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சுமன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், மாவட்ட பிற்படுத்தப்பட்ட நல அலுவலர் ம.கிருஷ்ணவேணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஏ.கே.சுரேஷ்குமார், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கலைச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள் திறப்பு





திண்டுக்கல், ஜூலை 8

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக கட்டடங்களை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் செ.சரவணன், மற்றும் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் ஆகியோர் திண்டுக்கல் மேற்கு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, குத்துவிளக்கேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து,

அந்த திட்டங்களின் பயன்கள் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கின்ற பொது மக்களுக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மக்கள் பயன்பாட்டிற்காக திண்டுக்கல் (மேற்கு) வட்டாட்சியர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. தரை தளத்தில், வட்டாட்சியர் அறை, அலுவலகம், பதிவுகள் வைப்பறை, கணினி அறை, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அறை, நூலகம், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கென தனித்தனி கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாற்றுதிறனாளிகளுக்கென சாய்வு தள வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

முதல் தளத்தில் தனி வட்டாட்சியர் அறை (வட்ட வழங்கல் அலுவலகம்), தனி வட்டாட்சியர் அறை (ஆதிதிராவிடர் நலம்), பதிவுகள் வைப்பறை, எழுதுபொருள் வைப்பறை, கூட்ட அரங்கம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனி கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட க்லெக்டர் தெரிவித்தார்.

# சேலம் ஆதித்தமிழர் கல்வி அறக்கட்டளை மற்றும் கோவை ராஜ் பிறந்தநாளை முன்னிட்டு அருந்ததியர் சமூக மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை வழங்கும் விழா



சேலம் ஆதித்தமிழர் கல்வி அறக்கட்டளை மற்றும் கோவை ராஜ் பிறந்தநாளைமுன்னிட்டு அருந்ததியர் சமூக மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை வழங்கும் விழா இன்று காலை திருவாக் கவுண்டனூர் ஜி.வி.என் கல்யாண மண்டபத்தில் நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமான்தலைமை தாங்கினார். சேலம் மத்திய மாவட்ட செயலாளர் ஏ.டி.ஆர் சந்திரன் வரவேற்றுபேசினார். பொது செயலாளர் கோவை ரவிக்குமார், நிதி செயலாளர் பெருமாவளவன், மாவட்ட செயலாளர்கள் ஸ்ரீதர், குட்டி வெங்கடேஷ், ஏசுராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக அமைச்சர் ராஜேந்திரன் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் ஆறுமுகசாமி கலந்து கொண்டார். முடிவில் மாநகர மகளிர் அணி செயலாளர் கல்யாணி நன்றி கூறினார்.

இதில் ம.திமு.க. மாநகர செயலாளர் அருள் மாது. ஆதித்தமிழர் பேரவை மாவட்ட, மாநகர நகர, ஒன்றிய நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். முன்னதாக ஆதித்தமிழர் பேரவை நிறுவன தலைவர் அதியமான் நிருபர்களிடம் கூறியதாவது:

மத்தியஅரசுதொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வருவது குறித்து மக்களிடம் எடுத்து கூறி ஓரணியில் தமிழ்நாடு என்று தி.மு.க. முன்னெடுத்துள்ளது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இதன் காரணமாக 2026ல் மீண்டும் தி.மு.க ஆட்சி அமைய மக்கள் விரும்புகிறார்கள். தி.மு.க. அரசை எந்த மாநிலத்தோடும் ஒப்பிட முடியாது. சர்வதேச நாடுகளுடன் தான் ஒப்பிட முடியும். தி.மு.க. அரசின் ஆட்சி அந்த அளவிற்கு உள்ளது. இவ்வாறு கூறினார்.

# கிராம பகுதி சுகாதார செவிலியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பெருந்திரள் முறையீடு




வேலூர் மாவட்ட கிராம பகுதி சுகாதார செவிலியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் தமிழகம் தழுவிய அளவில்நடைபெறும்பெருந்திரள் முறையீடு இயக்கத்தின் ஒரு பகுதியாக வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட தலைவர் செண்பகவல்லி தலைமையில் பெருந்திரள் முறையீடு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் ஷீலா கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

அரசு ஊழியர்கள் சங்க மாநில செயலாளர் கோ.மோகனமூர்த்தி, ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் சங்க மாவட்ட இணைசெயலாளர் பூசாமி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தியும் வெற்றி பெற வாழ்த்தியும் பேசினர். முடிவில் மாவட்ட பொருளாளர் சாவித்திரி நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில்

திண்டுக்கல்லில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கிராம சுகாதார செவிலியர்களின் பணி குறித்து பொதுவெளியில் உண்மைக்கு மாறாக பேட்டி அளித்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கருத்துக்களை திரும்ப பெற வேண்டும்.

2021 ஆம் ஆண்டு திமுக அரசு அனைத்து தற்காலிக ஊழியர்களையும் வீட்டிற்கு அனுப்பிய பிறகும் கிராம பகுதி சுகாதார செவிலியர்கள் கோவில் தடுப்பூசி பணி முழுமையாக செய்து முடித்தனர்.

கிராம சுகாதார செவிலியர்களின் காலி துணை மையப் பணியிடங்களை எவ்வித நிபந்தனையும் இன்றி உடனடியாக நிரப்பிட வலியுறுத்தியும், அப்பணியிடங்களில் பயிற்சி பெற்ற பணிக்காக காத்திருக்கும் கிராம சுகாதார செவிலியர்களை பணிஅமர்த்த வலியுறுத்தியும்,

தடுப்பூசி பணிகளை தனியார் மயமாக்கும் தமிழக அரசின் கொள்கை முடிவுகளை திரும்ப பெற வலியுறுத்தியும் முழக்கங்களை எழுப்பினர்.

# ஆலங்குளம் நகர காங்கிரஸ் சார்பில் மாநில தலைவர் செல்வப் பெருந்தகைக்கு வரவேற்பு




ஆலங்குளம். ஜூலை. 8

நெல்லை மாவட்டத்தில் காங்கிரஸ் கிராம கமிட்டி வார்டு கமிட்டி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு, 2026ம் சட்டமன்ற தேர்தல் ஆயத்த பணிகள் தொடர்பான கூட்டத்திற்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வருகை தந்தார்.

நெல்லை வண்ணாரப்பேட்டை மாநகர காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் மாநில தலைவர் செல்வப் பெருந்தகையை, ஆலங்குளம் நகர காங்கிரஸ் தலைவர் வில்லியம் தாமஸ் மரியாதை நிமித்தமாக சால்வை அணிவித்து வரவேற்றார். தென்காசி மாவட்டம் ஆலங்குளம் நகர காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள், புதிய உறுப்பினர் சேர்க்கை குறித்தும் தெரிவித்தார்.

இதில் ஆலங்குளம் நகர காங்கிரஸ் துணை தலைவர் லிவிங்ஸ்டன் விமல், காங்கிரஸ் மாநில வழக்கறிஞர் பிரிவு பால்ராஜ், நகர பொருளாளர் ஐசக் இமானுவேல், ஊடகப் பிரிவு தமிழ்மணி உள்பட ஆலங்குளம் நகர காங்கிரஸ் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பென்னாகரத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் திறப்பு



பென்னாகரம், ஜூலை.8

சென்னை தலைமை செயலகத்தில் வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்த நிலையில் பென்னாகரம் புதிய வட்டாட்சியர் அலுவலகத்தினை மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார்.

பென்னாகரம் பகுதிக்கு என புதிதாக அமைக்கப்பட்ட வட்டாட்சியர் அலுவலக திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாநில விவசாயிகள் தொழிலாளர் அணி துணை தலைவர் பி.என்.பி. இன்பசேகரன் மற்றும் பென்னாகரம் எம்எல்ஏ ஜி.கே. மணி ஆகியோர்கள் வருவாய் துறை மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் ரூ 5.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தினை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தனர். இதில் பென்னாகரம் வட்டாட்சியர் பிரசன்னமூர்த்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆறுமுகம் பென்னாகரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மடம். முருகேசன், ஏரியூர்ஒன்றிய செயலாளர் என் செல்வராஜ், நகரச் செயலாளர் வீரமணி, ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் நஞ்சப்பன், வினு அன்பழகன், பாமக மேற்கு மாவட்ட தலைவர் செல்வகுமார், இளைஞர் அணி மாவட்ட தலைவர் சத்தியமூர்த்தி, மேற்கு ஒன்றிய தலைவர் அருள்மொழி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு ஒன்றிய செயலாளர் ஆ. ஜீவானந்தம், பென்னாகரம் வருவாய் வட்டத்திற்கு உட்பட்ட வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், உதவியாளர்கள், அலுவலக பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# எடப்பாடி பழனிசாமியின் மக்கள் சந்திப்பு தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கான அடித்தளமாக அமையும்: ஜி.கே.வாசன் பேட்டி



தஞ்சாவூர், ஜூலை.8

தஞ்சாவூரில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் புதிய நிர்வாகிகள் அறிமுக விழா கூட்டம் நடைபெற்றது.

மாநில செயற்குழு உறுப்பினர்கள் சுரேஷ் மூப்பனார், சுதாகர் மூப்பனார், பிஎல்.ஏ. சிதம்பரம், என்.ஆர். ரங்கராஜன், என்.ஆர். நடராஜன், தர்மராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாநிலத் தலைவர் ஜி.கே.வாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

முன்னதாக அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தை உலுக்கிய ஒரு மிகப்பெரிய வேதனையான பிரச்சனை சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தில் கோவில் காவலாளி அஜித்குமார் மரணம். காவல் துறையினுடைய மனிதாபிமான அற்ற செயல்பாடு, காட்டுமிராண்டித்தனமான செயல்பாடு, அத்துமீறிய செயல்பாடு காரணமாக துன்புறுத்தி காவலாளி அஜித்குமார் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு காரணம் தமிழக அரசினுடைய செயல்பாடு. காவல்துறை வசம் முதலமைச்சரிடம் தான் உள்ளது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி என்றால் தமிழக அரசு அவருடைய பலவீனத்தின் அடிப்படையிலே காவல் துறையினர் அத்துமீறிய செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சம் ஆகிறது. இதன் அடிப்படையிலேயே சட்டம் ஒழுங்கும் தமிழகத்திலே படிப்படியாக கடைசி புள்ளிக்கு சென்று கொண்டிருக்கிறது. திருபுவனம் காவல் நிலையம், பின்னர் கோவில் சன்னதியில் குற்றவாளியா? இல்லையா? என்று தெரியாமலேயே எப்.ஐ.ஆர் கூட போடாமலேயே ஒரு வரை சந்தேகத்தின் பேரிலே அடித்து துன்புறுத்தி மரணப்படுக்கைக்கு கொண்டு செல்வது என்பது மிகுந்த வேதனைக்கும், வருத்தத்துக்குரிய ஒரு விஷயம். தொடர்ந்து விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. விசாரணை நடந்து கொண்டிருந்தாலும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை பொறுத்த வரையிலே திருபுவனம் காவலாளி மரணத்திலே ஏதோ அவிழ்க்க முடியாத முடிச்சு இருக்கிறது. அந்த முடிச்சை போட்ட அதிகாரி யார்? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அதன் அடிப்படையிலேயே தான் இந்த கொடுமையான சம்பவம் நடந்திருக்கிறது. முழுமையான விசாரணை மூலம் முடிச்சு அவிழ்க்கப்பட வேண்டும். அப்படி என்றால் தான் உண்மை நிலை வெளிவரும். இறந்த காவலாளி குடும்பத்திடம் மன்னிப்பு கேட்கலாம், பணம் கொடுக்கலாம், மனை கொடுக்கலாம், ஆறுதல் கூறலாம். ஆனால் உயிரை திரும்ப கொடுக்க முடியாது என்பதை அரசு உணர்ந்து செயல்பட வேண்டும். கண்மூடித்தனமாக அடிக்கக்கூடிய ஒரு நிலை காவலர்களுக்கும் காவலர்கள் போல் அவர்களோடு துணை நிற்பவர்களுக்கும் ஏற்பட்டு இருக்கின்றது என்றால் அவர்கள் சுயநினைவிலேயே முழுமையாக இல்லை.

இதற்கு காரணம் தமிழகத்தில் போதை பொருள் நடமாட்டம், டாஸ்மாக். இவைகள் இருக்கும் வரை இதுபோன்ற சம்பவங்கள் குறையாது. கொலை, கொள்ளை, திருட்டு, வீடுகளிலே வெளியூருக்கு சென்றால் குறி பார்த்து திருடுவது, பாலியல் பிரச்சனை போன்ற பல்வேறு பிரச்சனைகள் நடைபெற அடித்தளம் போதை பொருள் தான். இதன் நடமாட்டத்தை தடுக்க முடியாத தமிழக அரசு டாஸ்மாக் கடைகளை திறந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. அரசினுடைய தவறுகளை, விரோத போக்கை மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வருகின்ற தேர்தலிலே ஆட்சி மாற்றத்தின் அடிப்படையிலே பாடம் புகட்டுவார்கள் என்பதிலே மாற்று கருத்து இருக்க முடியாது

மக்கள் மீது வரி சுமத்துவது தி.மு.க. அரசனுடைய வழக்கமாகி விட்டது. எதற்கெடுத்தாலும் வரி என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத அரசாக இருக்கிறது. ஆசிரியர்கள், தொழிலாளர்கள், ஊழியர்கள் என யாராக இருந்தாலும் ஏதாவது ஒரு ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதற்கு காரணம் தமிழகத்தில் மக்கள் மனநிலையை பிரதிபலிக்க தவறிய ஆட்சியாளர்கள் தான். எனவே ஆட்சி மாற்றத்திற்கு தமிழக மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அ.தி.மு.க தலைமையிலான பா.ஜ.க, த.மா.கா மற்றும் ஒத்த கருத்துடைய கட்சிகள் தான் நம்பிக்கைக்கு உரிய கூட்டணியாக விளங்குகிறது.

எடப்பாடி பழனிச்சாமி கூட்டணி தலைவராக உள்ளார். இதனை மத்திய அமைச்சர் அமித்ஷாவே உறுதிப்பட கூறியுள்ளார்.

மக்களை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அரசின் மீது இருக்கிற அதிருப்தியை மக்கள் வெளிப்படையாக பேசத் தொடங்கி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் எதிர்மறை வாக்கு தமிழகத்திலே நாளுக்கு நாள் அனைத்து துறையிலும் அதிகரித்துக் கொண்டு போகிறது. எனவே தமிழகத்தினுடைய வெற்றி அணியாக முதல் அணியாக செயல்பட தொடங்கி இருக்கிற அ.தி.மு.க, பா.ஜ.க, த.மா.கா மற்றும் ஒத்த கருத்துடைய கூட்டணிகள் தேர்தலிலே வெற்றி பெறுவதற்கான அடித்தளத்தை மக்களை ஏற்படுத்திக் கொடுப்பார்கள். இன்னும் பல கட்சிகள் கூட்டணிக்கு வர உள்ளன.

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கு மக்கள் தயாராகி விட்டார்கள். கோவை மண்டலத்திலிருந்து தனது மக்கள் சந்திப்பு இயக்கத்தை அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்க உள்ளார். அவரது சுற்று பயணத்தில் செல்லும் இடங்களில் எல்லாம் த.மா.கா. நிர்வாகிகள், தொண்டர்கள் வரவேற்பு அளிப்பார்கள். எடப்பாடி பழனிச்சாமியின் மக்கள் சந்திப்பு சுற்றுபயணம் ஆட்சி மாற்றத்திற்கான அடித்தளமாக அமையும்.

# மாற்றுத்திறனாளி கலைஞர் கனவு இல்லம் கேட்டு மனு






மாற்றுத்திறனாளியான எனக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வழங்க வேண்டும் எனவலியுறுத்திமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மாவட்ட மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனு ஒன்றை கொடுத்தார். அதில் அவர் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், காட்டுசிவிரி கிராமம், நடுத்தெருவை சேர்ந்த அப்பாவு மகன் ஏழுமலை என்பவர் என்றும் இவருக்கு மகேஸ்வரி (28) மதுஷ்மா (16) என்ற இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். மாற்றுத்திறனாளியான இவர் வறுமை கோட்டின் கீழ் வசித்து வருகிறேன் என்றும், பல ஆண்டுகள் பழமையான ஓட்டு வீட்டில் வாழ்ந்து வருகிறார், இந்நிலையில் அந்த வீடு ஆங்காங்கே இடிந்து போய் உள்ளது, எப்பொழுது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் உள்ள அந்த வீட்டில் எண் பெண் குழந்தைகளுடன் வசிக்க முடியாத காரணத்தால், தற்போது உறவினர் வீட்டில் தங்கி கல்வி பயின்று வருகிறார். இந்நிலையில் பருவ மழை மற்றும் திடீர் திடீரென பெய்யும் மழைக்காலங்களில் வசிக்க முடியாத ஆபத்தான சூழ்நிலையில் மேலும் மழைப்பெய்யும் காலங்களில் தெருவில் வரும் வெள்ளம் என் வீட்டின் உள்ளே வந்து தேங்கி நிற்கின்றது.

எனவே பழமை வாய்ந்த சிதிலமடைந்த வசிக்க முடியாத சூழ்நிலையில் அந்த வீட்டில் நானும், என் மனைவியும் வசித்து வருகிறோம். எனவே அய்யா அவர்கள் தயவு செய்து எனக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வழங்க வேண்டும் என அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சியில் திமுக உறுப்பினர் சேர்க்கை



ஓரணியில் தமிழ்நாடு வாயிலாக கழகத்திற்கான உறுப்பினர் சேர்க்கை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் ஆலோசனைப்படி மாதவரம் தொகுதிக்குட்பட்ட புழல் ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில் வடகரை ஊராட்சி காந்தி தெருவில் புதிய உறுப்பினர்களை ஒவ்வொரு வீடாகச் சென்று சந்தித்து மக்களுடன் ஸ்டாலின் செயலி மூலம் இணைத்தனர்.

இதில் சேகர், ஜெயபால், விக்னேஷ்வரன், நாகராஜ், யோபு நாகராஜ், அருண்தாஸ், ஜானகிராமன், வினாயகம், மோகன்ராஜ், ஹரிகரன், மாரியப்பன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

8.7.2025

## 232வது ஆண்டு சந்தனக் குடம் மற்றும் பூலாம்வலசு சவ் வாஸ் நத்தரம்மாள் ஒலியுல்லா 254வது ஆண்டு சந்தனக் குடம் உரூஸ் விழா



கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி பள்ளப்பட்டி நகரில் புளியமரத்தெரு தர்ஹா ஷரீப் அரங்கில் பள்ளப்பட்டி சவ்வாஸ் மஹான் ஹாஜி மஸ்தான் சாகிபு ஒலியுல்லா 232வது ஆண்டு சந்தனக் குடம் மற்றும் பூலாம் வலசு சவ் வாஸ் நத்தரம்மாள் ஒலியுல்லா 254வது ஆண்டு சந்தனக் குடம் உரூஸ் விழா சவ்வாஸ் ஹாஜி மஸ்தான் சாகிபு நற்பணி மன்றம் சார்பில் 30ஆம் ஆண்டு நிகழ்ச்சி சவ்வாஸ் எஸ்.ஏ.அப்பாஸ் அலி தலைமையில் எஸ்.ஏ. முகம்மது அலி ஜின்னா, எஸ்.எம்.முஹம்மது பாரூக், முகம்மது ஒலி, சர்ப்ராஜ் நவாஸ் , சையது அபுதாஹிர், அன்சார் அலி,வேட சந்தூர் காஜா மைதீன், சேக் இஸ்மாயீல், முஹம்மது யூசுப் அலி, கொசவப்பட்டி பரக்கத் அலி ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

இந்தியா அரபு நட்புறவு கழக தேசிய செயலாளர் மற்றும் கல்வியாளர் டாக்டர் ஜெய்லானி தொடங்கி வைத்தார். விஜய் டிவி புகழ் இளைய இசை முரசு நெல்லை ஜி.எஸ்.அபுபக் கரின் இஸ்லாமிய இன்னிசை நடைபெற்றது.

## டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்திற்கு செனட் உறுப்பினராக வழக்கறிஞர் லட்சுமி நாராயணனை நியமித்து தமிழக அரசு ஆணை



ராஜபாளையம் ஜூலை 8

தமிழ்நாடு அரசு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினர்களாக சட்ட அமைச்சர், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், நிர்மல் குமார், அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன், ஸ்டேட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் அசன் முகம்மது ஜின்னா, பார் கவுன்சில் சேர்மன் அமல்ராஜ் உள்ளிட்ட வழக்கறிஞர் சங்க பிரதிநிதிகள், கல்வியாளர்களின் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர்.

தற்போது கூடுதலாக வழக்குரைஞர்கள் மணிவண்ணன், அருணை அருள்குமரன், போளூர் . மதியழகன், ராஜபாளையம் லட்சுமி நாராயணன் ஆகியோரை நியமித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. இவர்கள் இனிவரும் மூன்று ஆண்டுகளுக்கு சட்ட கல்வியின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கியும், சட்ட பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்கு பணியாற்றவும் வேண்டும்.

வழக்கறிஞர் லட்சுமி நாராயணன் ராஜபாளையத்தில் வழக்கறிஞராக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது

## இன்றைய ராசி பலன்கள் (8.7.2025)

மேஷம்: எதிர்பாராத சந்திப்பு மனதில் நம்பிக்கை தரும். பணிநிலை: பழைய வேலை வாய்ப்பு மீண்டும் வர வாய்ப்பு.

ரிஷபம்: வீண் தாமதங்கள் விலகும். பணிநிலை: உத்தியோகத்தில் மேலதிக பொறுப்புகள் வரும். பொருள் நிலை: செலவிலும் வருமானமும் சமமாயிருக்கும்.

மிதுனம்: பயண சாதகங்கள் உண்டு. பணிநிலை: தொழிலில் புதிய வாய்ப்பு அமையும். பொருள் நிலை: கூடுதல் வருமானம் கிடைக்கும்.

கடகம்: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். பணிநிலை: உழைப்பிற்கு கௌரவம் கிடைக்கும். பொருள் நிலை: பணம் வரும் பாதை திறக்கும்.

சிம்மம்: பழைய பிரச்சனைகள் தீரும் நாள். பணிநிலை: நிர்வாகத்துடன்நல்ல உறவு ஏற்படும். பொருள் நிலை: கையிருப்பு அதிகரிக்கும்.

கன்னி: புதிய முயற்சி வெற்றி பெறும். பணிநிலை: மற்றவர்களுக்கு உதவியாக இருப்பீர்கள்

துலாம்: உறவினர் சந்திப்பால் மகிழ்ச்சி. பணிநிலை: தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படும். பொருள் நிலை: அதிக செலவுகள் தோன்றும்.

விருச்சிகம்: மனதில் இருந்த பயம் விலகும். பணிநிலை: தடைபட்ட முயற்சிகள் நடக்கத் தொடங்கும். பொருள் நிலை: கடனை தள்ளி வைக்க வாய்ப்பு

தனுசு: சிறு சிக்கல்கள் தீரும். பணிநிலை: சக ஊழியர்களால் உதவிகள் கிடைக்கும். பொருள் நிலை: பழைய பாக்கி வசூலாகும்

மகரம்: சுப நிகழ்ச்சி பற்றிய திட்டங்கள் உருவாகும். பணிநிலை: பதவி உயர்வு வாய்ப்பு. பொருள் நிலை: புதிய வருமான வாய்ப்பு.

கும்பம்: பழைய நண்பர் உதவியாக வருவர். பணிநிலை: உங்கள் திறமை வெளிப்படும். பொருள் நிலை: உபரி வருமானம் கிடைக்கும்.

மீனம்: மனநிம்மதிஏற்படும்.பணிநிலை: புதிய வேலை வாய்ப்பு பற்றி தகவல் வரும். பொருள் நிலை: ஒப்பந்த பணம் வர வாய்ப்பு.

## எஸ்டிபிஐ கட்சியின் திருப்பூர் வடக்கு தொகுதி சார்பாக அரசியல் பயிலரங்கம்




திருப்பூர்வடக்குதொகுதி சார்பாக (672025) அன்று தொகுதி தலைவர் முகமது யாசின்தலைமையில்அரசியல் பயிலரங்கம் நடைபெற்றது வடக்கு தொகுதி செயலாளர் பாஷாமைதீன் வரவேற்புரை ஆற்றினார். மாநில பேச்சாளர்அ ப்துல் காதர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார் வடக்கு மாவட்ட தலைவர் பஷீர் அகமது மாவட்ட பொது செயலாளர் அப்துல் வகாப்மா வட்ட அமைப்பு பொது செயலாளர் அப்துல் சத்தார்ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டார்கள் தொகுதி பொருளாளர் நவீத் அகமது தொகுதி அமைப்பு செயலாளர்கலீமுல்லாமற்றும்தொகுதி நிர்வாகிகள்மு ன்னிலை வகித்தனர் தொகுதி செயற்குழு உறுப்பினர் அப்பாஸ் தொகுப்புரையாற்றினார்இ ந்த அரசியல் பயிலரங்கத்தில் தொகுதி நிர்வாகிகள் கிளை நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டுசிறப்பானமுறையில்நிகழ்ச்சி நடைபெற்றது இறுதியாக தொகுதி துணை தலைவர் ஹபீபுல்லா நன்றி உரையாற்றினார்



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை அடுத்த குத்தாலம் உக்தவேதீஸ்வரர் தெற்குவீதியில் அமைந்துள்ள பழமையான அருள்மிகு செங்கழுநீர் விநாயகர் ஆலயத்தில் திருப்பணிகள்செய்துமுடிக்கப்பட்டுநேற்றுகும்பாபிஷேகம் நடைபெற்றது இதனை முன்னிட்டு நான்கு கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றது நான்காவது கால யாகசாலை பூஜை நிறைவடைந்த நிலையில் யாக குண்டத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீர் அடங்கிய கடங்கள் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது . இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர் தொடர்ந்து பக்தர்களுக்கு அருள் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. குத்தாலம் காவல் துறையினர் பாதுகாப்பு பணிகள் சிறப்பாக செய்திருந்தனர்

## தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தஞ்சாவூர், ஜூலை 8

தஞ்சாவூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 600 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட கலெக்டரிடம் வழங்கினார்கள்.

இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) கே.எம். கார்த்திக்ராஜா, சமூக பாதுகாப்புத் திட்டம் தனித் துணை ஆட்சியர் பெ.மணிமாறன் , பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ஸ்ரீதர் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரஹேஜா, சாத்விக் அதிரடி... திண்டுக்கல் அணிக்கு வலுவான இலக்கு நிர்ணயித்த திருப்பூர் தமிழன்ஸ்



9வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர்கடந்த மாதம் 5ந் தேதி தொடங்கியது. 8 அணிகள் பங்கேற்ற இந்த தொடரின் லீக் மற்றும் பிளேஆப் சுற்று முடிவில் திருப்பூர்தமிழன்ஸ்,திண்டுக்கல்டிராகன்ஸ்ஆகியஅணிகள்இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இதில் கோப்பை யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இறுதிப்போட்டி திண்டுக்கல் நத்தத்தில் உள்ள என்.பி.ஆர்.கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெற்று வருகிறது. இதில் திருப்பூர் தமிழன்ஸ் திண்டுக்கல் டிராகன்ஸ் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற திண்டுக்கல் அணியின் கேப்டன் ரவிச்சந்திரன் அஸ்வின் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய திருப்பூர் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக துஷார் ரஹேஜா அமித் சாத்விக் களமிறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடினர். திண்டுக்கல் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய இந்த ஜோடி அணியின் ரன் வேகத்தை சீராக உயர்த்தியது. வெறும் 10.4 ஓவர்களில் 121 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. அரைசதம் அடித்து அசத்திய அமித் சாத்விக் 65 ரன்களில் (34 பந்துகள்) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சாய் கிஷோர் ஒரு ரன்னில் நடையை கட்டினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடி வந்த துஷார் ரஹேஜாவும் 77 ரன்களில் (46 பந்துகள்) ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து சிறிது அதிரடி காட்டிய முகமது அலி 23 ரன்களில் (14 பந்துகள்) வருண் சக்ரவர்த்தி சுழலில் சிக்கினார்.

இறுதி கட்டத்தில் சசிதேவ் ( 20 ரன்கள்) மற்றும் அனோவங்கர் (25 ரன்கள்) அதிரடியாக விளையாட திருப்பூர் அணி 200 ரன்களை கடந்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த திருப்பூர் தமிழன்ஸ் அணி 220 ரன்கள் குவித்துள்ளது. திண்டுக்கல் தரப்பில் கார்த்திக் சரண் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 221 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற வலுவான இலக்கை நோக்கி திண்டுக்கல் களமிறங்க உள்ளது.

## டெஸ்ட் கிரிக்கெட்: 58 ஆண்டு கால சோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த இந்திய அணி



இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் லீட்சில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா 371 ரன்களை இலக்காக நிர்ணயித்த போதிலும்அதைஇங்கிலாந்துஅணிகடைசிநாளில்வெற்றிகரமாகவிரட்டிப்பிடித்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 336 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இது பர்மிங்காம் மைதானத்தில் இந்திய அணி பெற்ற முதல் டெஸ்ட் வெற்றி இதுவாகும். இதற்கு முன்னர் இங்கு விளையாடிய 8 டெஸ்டில் ஆடி 7ல் தோல்வியும் ஒன்றில் டிராவும் கண்டிருந்தது. இந்த வெற்றியின் மூலம் அந்த 58 ஆண்டு கால சோகத்திற்கு சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அத்துடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்த மைதானத்தில் வெற்றி பெற்ற முதல் ஆசிய என்ற வரலாற்று சாதனையையும் படைத்துள்ளது. இதற்கு முன்பு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கு 8 டெஸ்டில் விளையாடியும் வெற்றி பக்கம் (5 தோல்வி, 3 டிரா) சென்றதில்லை. மற்றொரு ஆசிய அணியான இலங்கை இரு டெஸ்டில் ஆடி இரண்டிலும் தோல்வியை தழுவியுள்ளது குறிப்பிடதக்கது.

## டிஎன்பிஎல்: திண்டுக்கல் அணியை வீழ்த்தி திருப்பூர் தமிழன்ஸ் 'சாம்பியன்'

வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி திண்டுக்கல் நத்தத்தில் உள்ள என்.பி.ஆர்.கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெற்றது. இதில் திருப்பூர் தமிழன்ஸ் திண்டுக்கல் டிராகன்ஸ் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற திண்டுக்கல் அணியின் கேப்டன் ரவிச்சந்திரன் அஸ்வின் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய திருப்பூர் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக துஷார் ரஹேஜா அமித் சாத்விக் களமிறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடினர். திண்டுக்கல் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய இந்த ஜோடி அணியின் ரன் வேகத்தை சீராக உயர்த்தியது. வெறும் 10.4 ஓவர்களில் 121 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. அரைசதம் அடித்து அசத்திய அமித் சாத்விக் 65 ரன்களில் (34 பந்துகள்) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சாய் கிஷோர் ஒரு ரன்னில் நடையை கட்டினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடி வந்த துஷார் ரஹேஜாவும் 77 ரன்களில் (46 பந்துகள்) ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து சிறிது அதிரடி காட்டிய முகமது அலி 23 ரன்களில் (14 பந்துகள்) வருண் சக்ரவர்த்தி சுழலில் சிக்கினார். இறுதி கட்டத்தில் சசிதேவ் ( 20 ரன்கள்) மற்றும் அனோவங்கர் (25 ரன்கள்) அதிரடியாக விளையாட திருப்பூர் அணி 200 ரன்களை கடந்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த திருப்பூர் தமிழன்ஸ் அணி 220 ரன்கள் குவித்தது. திண்டுக்கல் தரப்பில் கார்த்திக் சரண் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 221 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற வலுவான இலக்கை நோக்கி களமிறங்கிய திண்டுக்கல் அணிக்கு ஆரம்பம் முதலே அதிர்ச்சி காத்திருந்தது. கேப்டன் அஸ்வின் (1) , பாபா இந்திரஜித் (9), விமல் குமார் (10), தினேஷ் (3) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த பேட்ஸ்மேன்களும் திருப்பூர் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் திண்டுக்கல் அணி 14.4 ஓவர்களில் 102 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் திருப்பூர் தமிழன்ஸ் அணி 118 ரன்கள் வித்தியாசத்தில் திண்டுக்கல் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்று அசத்தியது.

## வெற்றியின் 'சென்னை பைல்ஸ் முதல்பக்கம்' படத்திற்கு "யு/ஏ" சான்றிதழ்




தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவர் வெற்றி. இவரது நடிப்பில் சமீபத்தில் 'ராஜபுத்திரன்' படம் வெளியானது. இதில் நடிகர் பிரபுமுக்கியகதாபாத்திரத்தில்நடித்திருந்தார்.இப்படம்நல்லவரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து நடிகர் வெற்றி தற்போது 'சென்னை பைல்ஸ் முதல்பக்கம்'என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தினை சின்னதம்பி புரொடக்ஷன்ஸ் சார்பில் இயக்குனர் அனீஷ் அஷ்ரப் இயக்கியுள்ளார். இதில் கதாநாயகியாக ஷில்பா மஞ்சுநாத் நடித்துள்ளார். மேலும், தம்பி ராமய்யா, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனத்தை ஈர்த்தது. இத்திரைப்படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. இந்த நிலையில் இப்படத்திற்கு தணிக்கை வாரியம் "யு/ஏ" சான்றிதழ் வழங்கியுள்ளது. 'ராஜபுத்திரன்' படத்தை போல இப்படமும் நல்ல வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விஜய் சேதுபதியின் புதிய படத்தின் படப்பிடிப்பு பணி தொடக்கம்




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் விஜய் சேதுபதி. இவர்நடிப்பில்சமீபத்தில் ஏஸ் படம் வெளியானது. இப்படம்நல்லவரவேற்பைபெற்றது. அதனை தொடர்ந்து 'டிரெயின், தலைவன் தலைவி' போன்ற படங்களை தன் கைவசம் வைத்துள்ளார்'

மேலும் தெலுங்கு சினிமாவின் முன்னணி இயக்குனர்களுள் ஒருவரான பூரி ஜெகநாத் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளார். இப்படத்தை நடிகை சார்மி கவுர் தயாரிக்க உள்ளார். இதில்விஜய்சேதுபதியுடன்இணைந்துதபு,சம்யுக்தா, துனியாவிஜய், நிவேதாதாமஸ், மற்றும் பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளனர். இப்படம் தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியாக இருக்கிறது.

இந்த நிலையில் இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் இன்று பூஜையுடன் தொடங்கியுள்ளது. விஜய் சேதுபதி பூரி ஜெகன்நாத் கூட்டணியில் உருவாக உள்ள இப்படத்தின் மீது அதிகமான எதிர்பார்ப்புகள் உள்ளது.

## "கிங்டம்" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகரான விஜய் தேவரகொண்டா கவுதம் தின்னனூரி இயக்கத்தில் கிங்டம் என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் பாக்யஸ்ரீ போர்ஸ்கதாநாயகியாகநடித்துள்ளார். அனிருத்ரவிச்சந்தர் இசையமைத்துள்ளார்.

இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது. 'கிங்டம்' திரைப்படம் இரண்டு பாகமாக வெளியாகும் என்று தயாரிப்பாளர் நாக வம்சி தெரிவித்துள்ளார். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி வைரலானது. கிங்டம் படத்தின் தமிழ் டீசருக்கு நடிகர் சூர்யா குரல் கொடுத்துள்ளார். இப்படம் அதிரடி ஆக்சன் என்டர்டெய்னராக உருவாகியுள்ளது.

இதற்கிடையில் இப்படத்தின் ரிலீஸ் தேதியில் தொடர்ந்து குழப்பம் நீடித்து வந்த நிலையில், தற்போது தயாரிப்பாளர்கள் இறுதியான ரிலீஸ் தேதி அறிவித்து புரோமோ வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதன்படி, இப்படம் வருகிற 31ந் தேதி வெளியாக உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.